Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, ஜூலை 16, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 2

## தியாகமிக்க பொதுவாழ்க்கையில் நூறு வயது காணும் மூத்த தோழர் சங்கரய்யா அவர்களைப் போற்றுவோம்!" மு.க. ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, ஜூலை 16 2021: பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தோழரும் - தமிழ்நாட்டு அரசியலில் மூத்த தலைவரும் - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடக்க கால உறுப்பினருமான மதிப்பிற்குரிய என்.சங்கரய்யா அவர்கள் 100-ஆவது அகவை காணும் சிறப்புமிக்க நாள் நேற்று (ஜூலை 15). தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களில் 100 வயதைத் தொட்டு, பொதுவாழ்வில் உள்ள அனைவருக்கும் வழிகாட்டும் தியாகவாழ்வுக்குச் சொந்தக்காரராகத் திகழ்கிறார் சங்கரய்யா அவர்கள். சுதந்திரப் போராட்ட வீரராக, இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டக் களம் கண்டவராக, மாணவர்கள் அமைப்பைக் கட்டமைத்தவராக, பொதுவுடைமை இயக்கத்தின் போராளியாக, ஜனசக்தி - தீக்கதிர் ஏடுகளில் பொறுப்பு வகித்த பத்திரிகையாளராக, மக்கள் உரிமைக்காக சங்கநாதம் எழுப்பிய சட்டமன்ற உறுப்பினராக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழுச் செயலாளராக சங்கரய்யா அவர்களின் பொதுவாழ்க்கை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது.

8 ஆண்டுகள் சிறைவாசம் - 3 ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை என இன்னல்களை இன்முகத்துடன் எதிர்கொண்டு, தியாகத்தின் அடையாளமாக விளங்கும் பொதுவுடைமை இயக்கத் தலைவர் சங்கரய்யா அவர்கள் திராவிட இயக்கத்துடன் மக்கள் நலன் சார்ந்து இணைந்து நின்றவர். தேர்தல் அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் உடன்பட்டும் முரண்பட்டும் இருந்தாலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமதிப்பிற்குரிய தலைவராவார்.

சாதி ஒடுக்குமுறை எதிர்ப்பு - தீண்டாமை ஒழிப்பு - மதநல்லிணக்க முனைப்பு இவற்றுக்காகத் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு உற்ற துணையாக அவர் நின்றதை மறக்க முடியாது. பொதுவுடைமை இயக்கக் கொள்கைகளில் உறுதிமிக்க சங்கரய்யா அவர்கள் ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும் சொத்தாகத் திகழ்கிறார்.

வாழும் வரலாறாக நூறாவது பிறந்தநாள் காணும் சங்கரய்யா அவர்கள் மேலும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து என்னைப் போன்றவர்களுக்கு பொதுவாழ்க்கைப் பயணத்தில் வழிகாட்டிட வேண்டும் என்ற அன்புடனும் ஆவலுடனும் நேரில் வந்து வாழ்த்தி - வாழ்த்துகளைப் பெற்றுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய மூத்த தோழர் சங்கரய்யா அவர்களின் தியாகத்தையும் எளிமையையும் போற்றுகிறேன்.

முதலமைச்சர் என்ற முறையில் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நூற்றாண்டு வாழ்த்துகளை அவருக்கு வழங்கி மகிழ்கிறேன்.

## ரூ.2000 கலர் ஜெராக்ஸ் தாள்கள் கொடுத்து நூதன முறையில் ஆடுகள் திருட்டு கும்பல் ஆந்திர போலீஸிடமிருந்து கஸ்டடியில் எடுத்து மயிலம் போலீசார் விசாரணை

திண்டிவனம், ஜூலை 16 2021: திண்டிவனம் அருகே 2000 ரூபாய் போன்ற கலர் ஜெராக்ஸ் தாள்களை கொடுத்து நூதன முறையில் 5 ஆடுகளை ஆட்டோவில் கடத்தி சென்றவர்களை ஆந்திர போலீசார் கைது செய்யப்பட்ட நிலையில் பெண் உள்ளிட்ட மூன்று பேரை ஆந்திரப் போலீசிடம் இருந்து மயிலம் போலீசார் கஸ்டடியில் எடுத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் 22ம் தேதி மாலை விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த செண்டூர் பகுதியை சேர்ந்த பழனி என்பவரின் மனைவி புஷ்பாவிடம் ஆட்டோவில் வந்த ஒரு பெண் உட்பட மூன்று நபர்கள் 5 ஆடுகள் 26 ஆயிரத்திற்கு வாங்கிக் கொண்டு ஜெராக்ஸ் 2000 ரூபாய் நோட்டுகள் 13ஐ புஷ்பாவிடம் கொடுத்து விட்டு ஆட்டோவில் சென்றது அந்த கும்பல். பின்னர் அந்த நோட்டை கோழிக்கடை கொடுத்தபோது அது ஜெராக்ஸ் என தெரிய வந்ததை அடுத்து மயிலம் போலீசில் புகார் தெரிவித்தனர். வழக்குப்பதிவு செய்த போலீசார் தனிப்படை அமைத்து குற்றவாளிகளை தேடி வந்த நிலையில் அந்த கும்பல் ஆந்திர மாநில போலீசாரிடம் சிக்கியது தெரியவந்ததையடுத்து, மயிலம் போலீசார் ஆந்திரா விரைந்தனர்.



அங்கு பிடிபட்ட சென்னை முத்தமிழ் நகரை சேர்ந்த அப்துல் மஜீத் மற்றும் சென்னை பழைய வண்ணாரப் பேட்டையைச் சேர்ந்த ஷேக் ஆயுப் (32) அவரது மனைவி பர்கத்பீ (23) ஆகியோரை மயிலம் போலீஸார் காவலில் எடுத்து திண்டிவனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் 2ல் ஆஜர்படுத்தப்பட்டு போலீஸ் கஸ்டடியில் இரு தினங்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.









# ஸ்ரீவி. கலசலிங்கம் பல்கலையில் விளையாட்டுத்துறை இடஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கை!

## துணைத் தலைவர் முனைவர் எஸ். சசிஆனந்த் அறிக்கை!!



*விருதுநகர், ஜூலை 16 2021:* விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் விளையாட்டுத் துறை இட ஒதுக்கீட்டின் கீழ் கலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவிற்கான இளநிலை மற்றும் முதுகலை படிப்பிற்கு மாணவ, மாணவியர் 2021-22 சேர்க்கை நடைபெற உள்ளது.

துணைத்தலைவர் எஸ். சசிஆனந்த் அறிக்கையில், கூடைப்பந்து, கால்பந்து, கைப்பந்து, கபடி குத்துச்சண்டை, டேக்வாண்டோ, நீச்சல் மற்றும் வில்வித்தை ஆகிய விளையாட்டுகளுக்குத் தேர்வு போட்டிகள் 22-07.2021 மற்றும் 23.07.2021 ஆகிய இருதினங்கள் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என்று கூறியுள்ளார்.

மேலும், இப்போட்டித் தேர்வில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ. மாணவியர்கள் தங்களுடைய விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விளையாட்டுச் சீருடையுடன் கலசலிங்கம் பல்கலைக்கு வரவேண்டும்.

போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள வரும் மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர்கள் 48 மணி நேரத்திற்கு முன்னர் கோவிட் - 19 பரிசோதனை செய்திருக்க வேண்டும்.

தொடர்புக்கு *9789123630 / 7904285446 / 9790266618*

# ஐங்கரன் கிராண்ட் ஆட்டோஸ் நிறுவன கார் ஷோரூம் திறப்பு விழா



*திருப்பூர், ஜூலை.16 2021:* திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி, திருப்பூர் ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, வாஷிங்டன் நகர் பஸ் நிறுத்தம் அருகே கார் சர்வீஸில் அனைத்து வசதிகளையும் உடைய ஐங்கரன் கிராண்ட் ஆட்டோஸ் நிறுவனத்தினை முன்னாள் அமைச்சர்கள் கே ஏ செங்கோட்டையன் எம்எல்ஏ, கே சி கருப்பண்ணன் எம்எல்ஏ, திருப்பூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே என் விஜயகுமார் பெருந்துறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார் ஆகியோர் இன்று துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் ஷோரூம் உரிமையாளர் எஸ். பரமேஸ்வரன். பிரசாந்த். முன்னாள் மண்டல தலைவர் ராதாகிருஷ்ணன், ஒன்றிய பேரவை செயலாளர் எஸ் எம் பழனிசாமி, பாசறை செயலாளர் சந்திரசேகர், கூட்டுறவு சங்க தலைவர் மேக்னம் பழனிச்சாமி, ஊராட்சி கழக பொறுப்பாளர் சௌந்தர்ராஜன், கணக்கம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகசுந்தரம், முன்னாள் ஊராட்சிக் கழகச் செயலாளர் முருகேஷ், வார்டு உறுப்பினர் வாஷிங்டன் சண்முகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# விக்கிரவாண்டி போலீஸ் ஸ்டேஷனில் எஸ்.பி., ஸ்ரீநாதா திடீர் ஆய்வு



*விக்கிரவாண்டி, ஜூலை16 2021:* விக்கிரவாண்டி போலீஸ் ஸ்டேஷனில் எஸ்.பி., ஸ்ரீநாதா திடீர் ஆய்வு செய்து பதிவேடுகளை பார்வையிட்டார்.

விழுப்புரம் மாவட்ட எஸ்.பி., ஸ்ரீநாதா நேற்று விக்கிரவாண்டி போலீஸ் ஸ்டேஷனில் திடீர் ஆய்வு செய்தார். காவல் நிலையத்திலுள்ள கைதிகள் அறை, ஆயுதங்கள் இருப்பு அறைகளை பார்வையிட்டார். பின்னர் போலீஸ் ஸ்டேஷனில் நீண்டகாலமாக நடைபெறும் வழக்குகள் குறித்தும் ,குற்ற பதிவுகள் குறித்தும் , நீதிமன்ற வழக்குகள் குறித்த பதிவேடுகளை பார்வையிட்டார்.

ஆய்வின் போது இன்ஸ்பெக்டர் வினாயக முருகன், சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆம்ஸ்டிராங், சங்கரவடிவேல் மற்றும் போலீசார் உடனிருந்தனர். விக்கிரவாண்டி போலீஸ் ஸ்டேஷனில் எஸ்.பி., ஸ்ரீநாதா திடீர் ஆய்வு செய்து பதிவேடுகளை பார்வையிட்டார். அருகில் இன்ஸ்பெக்டர் வினாயக முருகன்.

# விக்கிரவாண்டி ஒன்றியத்தில் கல்வி வளர்ச்சி நாள் விழா





*விக்கிரவாண்டி, ஜூலை 16.2021:* விக்கிரவாண்டி ஒன்றியத்திலுள்ள அரசு பள்ளிகளில் காமராஜர் பிறந்த நாள் விழா கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது.

விக்கிரவாண்டி அடுத்த பனப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு தலைமை ஆசிரியை ஜெயந்தி தலைமையில் காமராஜர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆசிரியர்களுக்கு இனிப்பு வழங்கினார்.

செ.குன்னத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி தலைமை ஆசிரியர் ஜான்போஸ்கோ தலைமையில் காமராஜர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் கல்வி மேலாண்மை குழு உறுப்பினர் குணவதி, ஆசிரியர்கள் ராஜேந்திரன், லட்சுமி நாராயணன், விஜயலட்சுமி, டார்சன், ரமேஷ்பாபு, சிவக்குமார் ,ஜே.ஆர்.சி., மாவட்ட இணை கன்வீனர் தமிழழகன், ஊராட்சி செயலாளர் பாலகிருஷ்ணன், கல்வி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி அடுத்த பனப்பாக்கம் அரசு பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. விக்கிரவாண்டி அடுத்த செ.குன்னத்தூரில் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

# மதுரையில் எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி கட்டுமான பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் தமிழகத்துக்கு கொரோனா தடுப்பூசிகளை தாமதம் இல்லாமல் வழங்க வேண்டும் - மா.சுப்பிரமணியன்





*புதுடெல்லி, ஜூலை 16, 2021:* முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனையின் பேரில் மத்திய மந்திரிகளை சந்திப்பதற்காக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் டெல்லி சென்றார்.

அவருடன் கொரோனா தடுப்பு திட்ட அதிகாரி செந்தில்குமார், தேசிய சுகாதார குழுமத்தின் திட்ட அதிகாரி தரேஸ் அகமது ஆகியோரும் சென்றனர். நேற்று இரவே டெல்லி சென்ற இந்த குழுவினர் தமிழ்நாடு இல்லத்தில் தங்கி இருந்தனர்.

பகலில் மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதானை சந்தித்து பேசினார்கள். அதன் பிறகு சுகாதாரத்துறை மந்திரி மன்சுக் மாண்டலியாவை சந்தித்து பேசினார்கள்.

இந்த சந்திப்பின்போது கல்வி, சுகாதாரம் தொடர்பாக தமிழக அரசின் கோரிக்கைகளை நிறைவேற்றி தரும்படி வலியுறுத்தினார்கள்.

மொத்தம் 13 கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை கொண்டு சென்றனர். அந்த மனுக்களை இந்த சந்திப்பின்போது சம்பந்தப்பட்ட மந்திரிகளிடம் வழங்கினார்கள்.

இந்த சந்திப்பு பற்றி அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனைப்படி தமிழகத்துக்கு தேவையான பல்வேறு வி□ஷயங்களை நேரில் வலியுறுத்தினோம். முக்கியமாக 13 கோரிக்கைகளுடன் இந்த சந்திப்புகள் நடந்தது.

தமிழகத்துக்கு கொரோனா தடுப்பூசி தேவை அதிகமாக உள்ளது. எனவே தேவைப்படும் தடுப்பூசிகளை தாமதம் இல்லாமல் வழங்க வேண்டும்.

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி கட்டுமான பணிகளை தீவிரப்படுத்த வேண்டும்.

புதிதாக தொடங்கப்படும் 11 மருத்துவ கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை பணிகளை தொடங்க வேண்டும்.

தேசிய நல்வாழ்வு திட்ட செயலாக்கத்துக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை விடுவிக்க வேண்டும். கூடுதல் நிதியும் ஒதுக்க வேண்டும்.

தமிழகத்தில் 3,900 பேருக்கு கருப்பு பூஞ்சை நோய் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இந்த நோய்க்கு கூடுதலாக மருந்துகள் வழங்க வேண்டும்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

கோவையில் புதிதாக எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி அமைக்க வேண்டும்.

அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்பட்டோருக்கான ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

செங்கல்பட்டு மற்றும் குன்னூரில் தடுப்பூசிகள் தயாரிப்புக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

கொரோனா 2-வது அலையின்போது ஆக்சிஜன் தட்டுப்பாடு மிகப்பெரிய அளவில் ஏற்பட்டது. எனவே வருங்காலங்களில் இந்த தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க ஆக்சிஜன் மேலாண்மை திட்டங்களை உருவாக்க வேண்டும்.

தேசிய சுகாதார குழு திட்டத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

மத்திய அரசுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், நிதி மந்திரி நிர்மலா சீதாராமனுக்கு எழுதிய கடிதம், சுகாதாரத்துறை மந்திரிக்கு எழுதிய 2 கடிதங்கள், கொரோனா தடுப்பூசி தொடர்பாக பிரதமருக்கு எழுதிய கடிதம், நீட் தேர்வுக்கு விலக்கு கேட்டு பிரதமரை நேரில் சந்தித்து கொடுத்த மனு, எழுதிய கடிதம், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரம் ஆகியவற்றின் நகல்களையும் இத்துடன் இணைத்துள்ளோம்.

# புதுச்சேரியில் பள்ளி, கல்லூரிகளை திறப்பதை, சிறிதுகாலம் தள்ளி வைப்பதாக கல்வி அமைச்சர் நமச்சிவாயம் அறிவிப்பு



*புதுச்சேரி, ஜூலை 16, 2021:* புதுச்சேரியில் நாளை பள்ளிகள் திறக்கப்படாது என கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பரவலை அடுத்து தமிழகத்தில் கடந்தஆண்டு மார்ச் மாதம் பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன. இடையே பள்ளிகள் தொடங்கப்பட்ட நிலையில் 2 ஆவது அலை காரணமாக மீண்டும் பள்ளிகள் மூடப்பட்டன. 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஊரடங்கில் அரசு பல்வேறு தளர்வுகளை அளித்து வருகிறது. இதனிடையே புதுச்சேரியில் நாளை முதல் 9 ஆம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பள்ளிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. அதேபோல், நாளை அனைத்து கல்லூரிகளும் திறக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், புதுச்சேரியில் பள்ளி, கல்லூரிகளை திறப்பதை, சிறிதுகாலம் தள்ளி வைப்பதாக கல்வி அமைச்சர் நமச்சிவாயம் அறிவித்துள்ளார். கொரோனா தொற்று முழுவதுமாக குறையாததால் பள்ளி, கல்லூரிகள் திறப்பு தள்ளிவைப்பதாக தெரிவித்தார். பள்ளிகள் எப்போது திறப்பது என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

# இங்கிலாந்து தொடருக்கு சென்றுள்ள இந்திய அணி வீரர்கள் 2 பேருக்கு கொரோனா



*சென்னை, ஜூலை 16, 2021:* இங்கிலாந்து தொடருக்கு சென்றுள்ள இந்திய அணி வீரர்கள் 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி சௌதம்ப்டானில் ஜூலை 19 முதல் 23ஆம் தேதிவரை நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியிடம் மோதியது. இதில் இந்தியா 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. அதனைத் தொடர்ந்து இந்திய அணி வீரர்கள் நாடு திரும்பவில்லை. இங்கிலாந்துக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக, இங்கிலாந்திலேயே தங்கியிருக்கிறார்கள்.

இத்தொடர் ஆகஸ்ட் 4 முதல் செப்டம்பர் 14 வரை நடைபெறவுள்ளது. போட்டிகள் துவங்குவதற்கு, ஒரு மாத காலம் இடைவெளி இருந்ததால், இந்திய வீரர்களுக்கு மூன்று வாரம் ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. இந்திய வீரர்களும் மருத்துவப் பாதுகாப்பு வட்டத்தைவிட்டு வெளியேறி, ஊர் சுற்றினர். அப்போது எடுத்த புகைப்படங்களை விராட் கோலி, ரிஷப் பந்த், ரோஹித் ஷர்மா, பயிற்சியாளர் ரவி சாஸ்திரி போன்றவர்கள் இணையத்தில் பகிர்ந்திருந்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்நிலையில், இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் இருக்கும் இந்திய அணியைச் சேர்ந்த 2 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிசிசிஐ அறிவித்துள்ளது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களை வெளியிடவில்லை. இருவரும் நலமுடன் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே இங்கிலாந்து சென்று திரும்பிய இலங்கை அணியில் 2 பேருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டதால் இந்தியா-இலங்கையிடையிலான தொடர் ஜூலை 13ம் தேதியிலிருந்து ஜூலை 18-க்குத் தள்ளி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஸ்புட்னிக்-வி தடுப்பூசி ஏற்கனவே கொரோனா பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு தற்போது இந்த தடுப்பூசியின் ஒற்றை 'டோஸ்' கூட வைரசுக்கு எதிராக நல்ல பலனைத்தருகிறது




*சென்னை, ஜூலை 16, 2021:* கொரோனாவுக்கு எதிரான உலகின் முதல் தடுப்பூசியாக ஸ்புட்னிக்-வி தடுப்பூசி கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் ரஷியாவில் உருவாக்கப்பட்டது.

காய்ச்சல், ஜலதோஷத்தை ஏற்படுத்துகிற 2 அடினோ வைரஸ் கலவையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்படுகிற இந்த தடுப்பூசி, கொரோனாவுக்கு எதிராக 92 சதவீத செயல்திறனைக் கொண்டிருப்பதாக ஏற்கனவே தகவல்கள் வெளிவந்தன.

இந்த நிலையில் ஏராளமான மக்களுக்கு விரைவாக பாதுகாப்பு அளிப்பதற்கு வசதியாக இரு டோஸ் தடுப்பூசிகளைவிட ஒற்றை டோஸ் தடுப்பூசி பலன் அளிக்குமா என அர்ஜெண்டினா நாட்டில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் 'செல் ரிப்போர்ட்ஸ் மெடிசின்' பத்திரிகையில் வெளியாகி உள்ளது.

அதில் ஏற்கனவே கொரோனா பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு தற்போது இந்த தடுப்பூசியின் ஒற்றை 'டோஸ்'கூட வைரசுக்கு எதிராக நல்ல பலனைத்தருவது தெரிய வந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது பற்றி ஆராய்ச்சியாளர் ஆண்டரியா கமர்னிக் கூறுகையில், "உலகின் பல பிராந்தியங்களில் தடுப்பூசி வழங்கல் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது, சீரான, சமமான வினியோகம் இல்லை. எனவே தடுப்பூசி உத்திகளை மேம்படுத்த நோய் எதிர்ப்புச்சக்தி குறித்த தகவல்கள் அதிகாரிகளுக்கு அவசரமாக தேவைப்படுகிறது. அதற்காகத்தான் இந்த ஆய்வு நடத்தப்பட்டது" என தெரிவித்தார்.

அர்ஜெண்டினா நாட்டில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் 389 சுகாதார பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டனர். அவர்களில் பலருக்கு ஸ்புட்னிக்-வி தடுப்பூசியின் ஒற்றை டோஸ் மற்றும் சிலருக்கு 2 டோஸ் போட்டு பரிசோதிக்கப்பட்டது. இதில்தான் ஏற்கனவே பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ஒற்றை டோஸ் தடுப்பூசியே நல்ல நோய் எதிர்ப்புச்சக்தியை உருவாக்கி இருப்பது கண்டறியப்பட்டது.

குறிப்பாக இவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியால் நோய் எதிர்ப்புச்சக்தி கூடுதலாக உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# திண்டிவனத்தில் மாவட்ட தி.மு.க., தொண்டரணி சார்பில் வியாபாரிகளுக்கு அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் நிவாரணம்



திண்டிவனம், ஜூலை 16, 2021: திண்டிவனதில் மாவட்ட தி.மு.க தொண்டரணி சார்பில் ஒன்றிணைவோம் வா திட்டத்தின் கீழ் தமிழக முதலமைச்சரின் உத்தரவின் பெயரில் திண்டிவனம் உழவர்சந்தையில் வியாபாரம் செய்யும் விவசாயிகள் மற்றும் தெருவோரங்களில் வியாபாரம் செய்பவர்களுக்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் டி.ஜி.ராஜசக்தி, மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் எம்.எ.மலர் செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.ரவிச்சந்திரன், வி.எஸ்.முருகன், வழக்கறிஞர் அணி டி.மோகன் ஆகியோர் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தொடங்கி வைத்தார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாநில மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் சேகர், ஒலக்கூர் ஒன்றிய செயலாளர் பாங்கை சொக்கலிங்கம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.சி.ஆதித்யன், துணை அமைப்பாளர் எம்.டி.பாபு, மாவட்ட கலை இலக்கிய அணி சீனிராஜ், வி.எ.ரவி, எ.சிற்றரசு, கேணிப்பட்டு கே.எஸ்.செந்தில்குமார், ஜி.பாக்யராஜ், எல்.அரவிந்குமார், ஜி.பாலாஜி, எஸ்.கோகுலகிருஷ்ணன், எம்.முத்தழகன், கே.ஐயப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர், இதில் 300-க்கும் மேற்பட்டோருக்கு அரிசி, காய்கறி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

# ஐ என் எஸ் பருந்து கடற்படை தளம் விரைவில் விரிவாக்கம் செய்யப்படும்: மன்னார் வளைகுடா கடற்பரப்பில் சட்டவிரோத நடவடிக்கையை தடுக்க கடற்படைக என சொந்தமான கப்பல் முழு வீச்சில் ரோந்து



ராமேஸ்வரம், ஜூலை 16 2021: பாகிஸ்தான் போர் வெற்றிச்சுடருடன் ராமநாதபுரம் ஐ என் எஸ் பருந்து கடற்படை முகாமில் சிறப்பு அணி வகுப்பு நடைபெற்றது. கடந்த 1971ல் இந்தியா- பாகிஸ்தான் இடையேயான போரில் இந்தியா வெற்றியடைந்தது . இதன் 50 ஆண்டு நிறைவை குறிக்கும் விதமாக வெற்றிச்சுடர் தூத்துக்குடி ஐஎன்எஸ் கட்டபொம்மன் கடற்படை நிலையத்தில் இருந்து ராமநாதபுரம் அருகே உச்சிப்புளி ஐஎன்எஸ் பருந்து கடற்படை நிலையத்திற்கு நேற்று மாலை வந்தது. உச்சிப்புளி ஐஎன்எஸ் பருந்து கடற்படை தளத்தில் வீரர்களின் அணிவகுப்புடன் கமெண்டர் வெங்கடேஷ் ஐய்யர் வெற்றிசுடரை பெற்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதன் பின்னர் மாவட்ட அலுவலகத்திலும், அதன் பின்னர் டி ஐ ஜி அலுவலகத்திலும் வெற்றிச் சுடர் கருவுரவ படுத்தப்பட உள்ளது. இந்தியா- பாகிஸ்தான் போரில் பங்கேற்ற ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் இருவரின் வீடுகளுக்கு வெற்றிச்சுடர் எடுத்துச் செல்லப்படுகிறது. அதே போல் நாளை நண்பகல் வெற்றி சுடர் தனுஷ்கோடிக்கும், அங்கிருந்து அப்துல் கலாம் தேசிய நினைவக அருங்காட்சியகம் கொண்டு செல்லப்படுகிறது. பின் உரிய மரியாதை செலுத்தப்பட்டு மதுரைக்கு வெற்றிச்சுடர் கொண்டு செல்லப்படுகிறது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய, ஐ.என்.எஸ் பருந்து நிலைய கமெண்டர் வெங்கடேஷ்அய்யர் 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற போரின் நினைவு தினமாக இன்று போரில் உயிரிழந்தவர்களுக்கு ஐஎன்எஸ் பருந்து உச்சிப்புளி கடற்படை தளத்தில் வெற்றிசுடருங்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. போரில் உயிர்நீத்த ராமநாதபுரத்தைச் சேர்ந்த இரு வீரர்களின் வீட்டிற்கு இந்த நினைவு ஜோதி அனுப்பப்பட்டு அங்கு அஞ்சலி செலுத்தப்படும். ஐஎன்எஸ் பருந்து கடற்படை தளத்தை விரிவாக்கம் செய்வதற்கு தமிழக அரசு மற்றும் இந்திய ரயில்வே சார்பில் அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளது விரைவில் ஐஎன்எஸ் பருந்து கடற்படை தளம் விரிவாக்கம் செய்யப்படும். மன்னார் வளைகுடா கடற்பரப்பில் தொடர்ந்து சட்டவிரோத நடவடிக்கை அதிகரித்து வருவதையடைத்து பாக் ஜலசந்தி கடற்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு வந்த இந்திய கடற்படைக்கு சொந்தமான இரண்டு அதிநவீன ரோந்து கப்பல்கள் மன்னார் வளைகுடாவில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்காக முழு வீச்சில் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கடந்த மே மாதம் இலங்கையில் சிங்கப்பூரைச் சேர்ந்த சரக்குக் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் கப்பலில் இருந்து வெளியான எண்ணெய் கசிவுகள் இந்திய கடற்பரப்பிற்குள் வந்துள்ளதாக கடல் வாழ் உயிரின விஞ்ஞானிகள் தெரிவித்தது குறித்து செய்தியாளர் கேட்டதற்கு இந்திய கடற்படைக்கு சொந்தமான ஹெலிகாப்டர் மூலம் கடலில் எண்ணெய் கசிவு உள்ளதா என தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதுவரை இந்திய கடற்பகுதிக்குள் சரக்கு கப்பலில் இருந்து வெளியான எந்தவிதமான எண்ணெய் கசிவுகளும் தென்படவில்லை என்றார்.

# காமராஜர் பிறந்தநாளில் ஏழைகளுக்கு உதவி



மதுரை, ஜூலை 16 2021: மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் கல்வி கண் திறந்த பெருந்தலைவர் காமராஜரின் 119 வது பிறந்தநாளை முன்னிட்டு காமராஜர் நற்பணி நண்பர்கள் சார்பாக 10க்கும் மேற்பட்ட ஏழை குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு, 2 மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது. முன்னதாக அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

# காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூரில் 300 நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது



திருப்பூர், ஜூலை 16 2021: திருப்பூர் மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக. தமிழக முன்னாள் முதலமைச்சர் கர்மவீரர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் அனுப்பர்பாளையம் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு 300 நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. மாநகர மாவட்ட தலைவர் கிருஷ்ணன் மற்றும் மகிளா காங்கிரஸ் தலைவர் சகாயமேரி தலைமையில் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் முத்துகிருஷ்ணன் வி ஆர் ஈஸ்வரன் சூப்பு ஈஸ்வரமூர்த்தி முன்னிலை வகித்தனர் மற்றும் கோவிந்தசாமி கோபால்சாமி கிருஷ்ணதாஸ் தீபிகா தேவ சாமி மற்றும் அனைத்து தரப்பு நிர்வாகிகளும் மகிளா காங்கிரஸ் சிவாஜி மன்றத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பின்னர் திருப்பூர் வார்டு 30 பகுதியில் பி.என்.ரோடு ராயல் பேக்கரி அருகில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 300 நபர்களுக்கு மாநகர பொதுச்செயலாளர் கோவிந்தசாமி ஏற்பாட்டில் மாநகர மாவட்ட தலைவர் ஆர் கிருஷ்ணன் பொதுமக்களுக்கு அரிசி சிப்பம் வழங்கினார் மற்றும் திமுக பகுதி கழக செயலாளர் போலர் சம்பத் செந்தில் கோபால்சாமி கதிரேசன் ரத்தினசாமி நடராஜ் யுவராஜ் சுரேஷ் துரைசாமி சிவாஜிசெந்தில் ஹசன் முபாரக் பாஷா கௌஸ் ரத்தினசாமி நடராஜ் சிவராஜ் சுரேஷ் ரவி சுபாஷ் பாரதி கிஷோர் அருள்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதுரை: மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடச்சனேந்தல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நவீன அரிசி ஆலையில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர்.உடன் மாவட்ட ஆட்சியர் அனிஷ்சேகர், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் தளபதி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், ஆகியோர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஒன்றியம் வீரணக்கு குப்பம் ஊராட்சியில் கொரோனோ தடுப்பூசியை ஊராட்சி மன்ற தலைவர் ராணி மாதையன்,மருத்துவர் ஸ்ரீபால் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு கொரோனோ தடுப்பூசி செலுத்தப்பட்டது,இதில் வீரணகுப்பம் கதிரம்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு தடுப்பூசி போட்டுக்கொண்டனர்.



திருப்பூர்: திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் எஸ் வினித் ஐ ஏ எஸ் மரியாதை நிமிர்த்தமாக இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் எடுத்துக் கூறினார். பொதுமக்களுக்கு நல்ல உதவிகளை செய்து வரும் இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவனத்தையும் அதன் நிறுவனர் இந்திரா சுந்தரத்தை மாவட்ட ஆட்சியர் பாராட்டினார்.

# பா.ம.க.,எம்.எல்.ஏ., பெயர் புறக்கணிப்பு கட்சியினர் வாக்குவாதம் . சப்-கலெக்டர் சமாதானம்



விக்கிரவாண்டி, ஜூலை 16 2021: வீடூர் அணையில் அமைச்சர் நிகழ்ச்சி பேனரில் தொகுதி பா.ம.க., எம்.எல்.ஏ., பெயர் புறக்கணித்ததால் அதிகாரிகளிடம் கட்சியினர் வாக்குவாதம் செய்தனர் . எம்.எல்.ஏ.,வை சப்-கலெக்டர் அமித் சமாதானம் செய்தார் .

திண்டிவனம் வட்டம் மயிலம் ஒன்றியம் வீடூர் அணையில் நேற்று தூர் வாரும் பணியினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தார். விழா நடைபெறும் இடத்தில் அரசு சார்பில் வைக்கப்பட்டிருந்த பேனரில் அமைச்சர் பெயர் மட்டும் இருந்தது. அதே போன்று கட்சியினர் வைத்திருந்த பேனரில் அமைச்சர் பெயர் மட்டுமே இருந்தது.

நேற்று காலை 10 மணிக்கு விழா நடைபெறும் இடத்திற்கு பா.ம.க., மாநில செயற்குழு உறுப்பினர் செங்கேணி, தமிழ்மாறன் ,கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் துரைராஜ், சண்முகம், ராஜூ மற்றும் கட்சியினர் திரளாக வந்து பொதுப்பணி துறை கண்காணிப்பு பொறியாளர் ரவிமனோகரிடம் தொகுதி எம்.எல்.ஏ., சிவக்குமார் பெயர் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுவதாக வாக்குவாதம் செய்தனர். அவரிகளிடம் பதிலளித்த கண்காணிப்பு பொறியாளர் இது பற்றி கலெக்டர் அலுவலகத்தில் தான் கேட்க வேண்டும் . பேனருக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என கூறினார்.

இதையடுத்து 10.20 மணிக்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த எம்.எல்.ஏ., சிவக்குமாரை திண்டிவனம் சப்-கலெக்டர் அமித், விழுப்புரம் டி.எஸ்.பி., பழனிசாமி, போலீஸ் இன்ஸ்பெக்டர் வினாயக முருகன் ஆகியோர் பேனரில் பெயர் வராதது குறித்து வரும் காலங்களில் இது போன்ற தவறுகள் நடைபெறாது என கூறினர். எம்.எல்.ஏ., சிவக்குமார் கட்சியினர் வாக்குவாதம் செய்தது தனக்கு தெரியாது என கூறி நிகழ்ச்சியில் பங்கேற்றார் .

விக்கிரவாண்டி அடுத்த வீடூர் அணையில் , திண்டிவனம் சப்ஸ்ரீகலெக்டர் அமித், பா.ம.க., எம்.எல்.ஏ., சிவக்குமாரை சமாதானம் செய்தார். அருகில் டி.எஸ்.பி., பழனிசாமி.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Friday, July 16, 2021 | Rs.2/- | ISSUE - 2


## PM inaugurates the International Cooperation and Convention Centre – Rudraksh in Varanasi

Chennai, July 16, 2021: Prime Minister Shri Narendra Modi inaugurated the International Cooperation and Convention Centre – Rudraksh in Varanasi, which has been constructed with Japanese assistance. Then he inspected the Maternal and Child Health Wing, BHU. He also met with officials and medical professionals to review Covid preparedness.

Addressing the gathering, the Prime Minister said that despite Covid, the pace of development remains intact in Kashi. He added that the 'International Cooperation and Convention Center - Rudraksh' is the result of this creativity and dynamism. He said this Centre shows the strong connect between India and Japan. He lauded Japan's effort in helping to build the convention centre.

Shri Modi recalled that Prime Minister of Japan Mr. Suga Yoshihide was the Chief Cabinet Secretary at that time. From then till he became the Prime Minister of Japan, he has been personally involved in this project. Shri Modi added that every Indian is grateful to him for his affinity towards India.

The Prime Minister, Shri Narendra Modi remembered former Prime Minister of Japan Mr. Shinzo Abe who was closely connected with today's event. He recalled the moment when he had a discussion with the then Prime Minister of Japan, Mr. Shinzo Abe on the idea of Rudraksh when he came to Kashi. The Prime Minister said this building has both the shine of modernity and cultural glow, it has the connection of India Japan relationship as well as scope of future cooperation also, said the Prime Minister. Shri Modi said that from his vist to Japan this kind of people to people relations were envisaged and projects like Rudraksh and Zen garden in Ahmedabad symbolize this relationship.

Prime Minister Shri Narendra Modi lauded Japan for being one of the most trusted friends of India today




in both the strategic and economic spheres. He added that India's friendship with Japan is considered one of the most natural partnerships in the entire region. India and Japan are of the view that our development should be linked with our gaiety. This development should be all-round, should be for all, and should be all-encompassing.

The Prime Minister said songs, music and art flow from veins in Banaras. Here on the ghats of the Ganges so many arts have been developed, knowledge has reached the summit and so many serious thoughts related to humanity have taken place. That is how Banaras can become a huge global centre of music, religion, spirit and of knowledge and science. He added that this Centre will be a cultural hub and a medium to unite different people. He requested the people of Kashi to preserve this Centre.

Kashi has been adorned with so many development projects in the last 7 years, how could this adornment be completed without Rudraksha ?, said the Prime Minister. Now that Kashi which is the real Shiva has worn this Rudraksha, the development of Kashi will shine more, and the beauty of Kashi will increase more.

## Kamal Haasan's interaction with the athletes of Thamizh Nadu representing India in the forth coming Tokyo Olympics

Chennai, July 16, 2021: Makkal Needhi Maiam President Kamal Haasan provided a pleasant surprise to athletes from Thamizh Nadu who will be taking part in the forthcoming Tokyo Olympics, during a delightful video-call interaction yesterday (14.07.2021) evening. Kamal Haasan spoke with members of the athletic contingent and wished them luck as they embark upon their Olympic journey. The athletes present during the meeting were Arokia Rajiv (4x400m men's relay), Naganathan Pandi, (4x400m men's relay) Revathi Veeramani, Subha Venkatesan, (4x400m mixed relay category) and Dhanalakshmi Sekhar (4x400m mixed relay category).

Kamal Haasan hailed the athletes as the "real universal heroes" who, in spite of hailing from financially weak backgrounds, have distinguished themselves as outstanding achievers. "Cinema fans affectionately call me Ulaganayagan, but in reality, it is you who deserve the title. You have the distinction of making the world sit up and take notice of your achievements. Even the greatest of empires lasts no more than 500 years; poverty, too, is similarly impermanent. If those with talent set their minds to it, they can chase away poverty in no time. I am sure you are going to do that."

Kamal Haasan hailed the athletes as the "true wealth of India" and said it was his duty to celebrate them. He further exhorted them to pass on the knowledge that they have acquired from their teachers,



to up-and-coming athletes. Kamal Haasan advised them to stay calm and collected, and "respect your competition as much as you respect yourself. Things will happen automatically. We are waiting to cheer you on as you return home with medals."

An excited Revathi recounted how Kamal Haasan had called to congratulate her a few days ago, and said they would do their best to win medals in the Olympics. "We are very happy that you have motivated us. We will do our best to win medals for India."






## CCI receives notice relating to acquisition of equity stake in JSW Cement by Synergy Metals Investments Holding Limited, under Green Channel and is deemed approved

Chennai, July 16, 2021: The Competition Commission of India ("CCI") received a notice relating to acquisition of equity stake in JSW Cement ("Target") by Synergy Metals Investments Holding Limited ("Acquirer"), under Green Channel and is deemed approved.

The Acquirer is the investment fund of its ultimate controlling entity, Synergy Metals and Mining Fund I LP ("Synergy Fund"). Synergy Fund invests in the industrials, metals and power sectors globally.

The Target is an unlisted public company based in India and belongs to the JSW group of companies. Its business activities include (a) production, manufacturing and trading of cement, clinker, ground granulated blast-furnace slag, slag sand and related products; (b) mining, crushing and grinding of raw materials and all other processes to finally produce and manufacture cement; (c) road transportation services; and (d) purchase of land/immovable properties to erect houses/building, etc.

## Commerce Minister bats strongly for India and the Developing World at the WTO

Chennai, July 16, 2021: Minister of Commerce & Industry, Consumer Affairs and Food & Public Distribution and Textiles, Shri Piyush Goyal today spoke strongly for the rights of developing countries at the Ministerial meeting of the WTO on the crucial fisheries subsidy negotiations. The meeting was attended by Ministers and Ambassadors from other WTO members and the DG WTO Dr. Ngozi.



Delivering a strong statement on behalf of India, Shri Goyal stated that India is very keen to finalize the agreement because irrational subsidies and overfishing by many countries is hurting Indian fishermen and their livelihood. He expressed his disappointment that the Membership is still short of finding the right balance and fairness in the agreement. The minister also emphasized Prime Minister Modi's thrust to promote fishing sector and protect small fishermen.

Shri Goyal cautioned that we should not repeat the mistakes made during the Uruguay Round three decades ago that allowed unequal and trade-distorting entitlements for select developed country Members, particularly in agriculture. These unfairly constrained less developed members who did not have the capacity and resources to support their industry or farmers then. Shri Goyal expressed concern that any unbalanced or unequal agreement now would bind us into current fishing arrangements, which may not meet future requirements. He pointed out that it is essential that big subsidizers take greater responsibility to reduce their subsidies and fishing capacities, in accordance with the principles of 'Polluter Pays' and 'Common but Differentiated Responsibilities'.

Shri Goyal observed that any agreement must recognize that different countries are at different stages of development and that current fishing arrangements reflect their current economic capacities. The agreement has to provide for current and future needs. While putting forth India's demands, he said that the per capita fisheries subsidy given by most developing countries is minuscule compared to advanced fishing nations. Shri Goyal clearly demanded that countries like India who are yet to develop fishing capacities, cannot sacrifice their future ambitions. Allowing advanced nations to continue grant of subsidies is unequal, unfair and unjust.

While responding to the specific question posed by the DG to the ministers, he said that limiting Special & Differential Treatment (S&DT) to poor and artisanal fishermen only is neither appropriate nor affordable, and is not acceptable. S&DT is required to not only protect livelihoods of poor fishermen but also to address food security concerns, have necessary policy space for developing the fisheries sector and the need for larger time period for any transition..

Highlighting that protection of environment is ingrained in the Indian ethos for ages and has been repeatedly stated by our Prime Minister, Shri Goyal urged that India is committed to conclude the negotiations, as long as it provides for balancing current and future fishing needs, preserving space for equitable growth in fishing capacities in future, and an effective S&DT without any imbalances.







Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction